

# JESUS IS BAPTIZED

## இயேசு ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார். மத்தேயு 3 : 13–17

அவர் யோவான் ஸ்நானகன் என்று அழைக்கப்பட்டார் (ஞானஸ்நானம் என்பதின் அர்த்தம் தண்ணீரை பயன்படத்துவது என்பதாகும்) பாவ மன்னிப்புக்கு என்று யோவான் ஸ்நானகன் ஜனங்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். ஞானஸ்நானம் என்றால் தண்ணீரை பயன்படுத்தவது என்று அர்த்தமாகும். யோவான் தண்ணீரை பயன்படுத்தினார் தண்ணீருடன் கூட தேவனுடைய வார்த்தையையும் அவர் பயன்படுத்தினார்.

ஒரு நாள் இயேசு யோவானிடத்தில் வந்து ஞானஸ் நானம் கொடுக்கும்படி கேட்டார். யோவான் முதலில் அப்படி செய்ய விரும்பவில்லை. எல்லா ஜனங்களையும் அவர்களுடைய பாவத்திலிருந்து இரட்சிக்கும் படிக்கே அவர் வந்திருப்பதாகவும், இதுவும் கூட அவருடைய அந்த இரட்சிப்பின் வேலையின் ஒரு பகுதியே என்றும் யோவானிடத்தில் இயேசு சொன்னார். ஆகவே யோவான் இயேசுவுக்கு ஞானஸ் நானம் கொடுத்தான்.

யோவான் எப்போது இயேசுவுக்கு ஞானஸ் நானம் கொடுத்தாரோ அப்போது குறிபிடத்தக்க ஆச்சரியம் நிகழ்ந்தது. பரலோகம் திறக்கப்பட்டது. வானத்திலிருந்து தேவ ஆவி புறாவைப்போல் இயேசுவின் மேல் இறங்கியது. வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டானது;இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது.

## ஜெபம்

ஒ! இயேசுவே, எங்களை இரட்சித்ததற்காகவும், எங்கள் இரட்சிப்புக்கு தேவையான எல்லாவற்றையும் நீர் எங்களுஙகளு செய்தமைக்காகவும் நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம். ஆமென்.

### வளர்ந்த பிள்ளைகளுக்குறிய மனப்பாட வசனம் மாற்கு 16 : 16

“விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப் படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளதாகத் தீர்க்கப்படுவான்.

### அப்போஸ்தலர் 2 : 16

“இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு” என்றேன்.